1972 சனவரி 31]

பேருந்து சாலைகள்

* 193 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேருந்துகள் செல்லும் சாலைகளையெல்லாம் நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இம்மாதிரி பஸ் போக்குவரத்து உள்ள ரோடுகளை எல்லாம் நெடுஞ்சாலைத் துறையினர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்த பின்னும் சில சாலைகள் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கின்றனவே. துரிதமாக அவற்றையும் எடுத்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பஸ் போக்குவரத்துச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்ளத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஆண்டுக்குச் சில மைல் நீளச் சாலைகள் எடுத்துக்கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 1972-73-ம் ஆண்டில் ஆயிரம் மைல்களை மேற்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு நீண்டகாலத் திட்டமாகும். மூவாயிரம் மைல்கள் பஸ் போக்குவரத்துச் சாலைகள் இருக்கின்றன. நிதி நிலைமையை அனுசரித்து மற்ற விஷயங்களையும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி: இந்த பஸ் போக்குவரத்தில் இருக்கும் பாதைகளை குறைந்தது ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் எடுத்துக்கொள்ள சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஒரு சிறப்புத் திட்டத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. கு. அ. பொம்மன்: கிராமப்புறங்களில் இருக்கும் சாலைகள் பஞ்சாயத்து யூனியன்களிடம் இருப்பதால் அந்த ரோடுகளையும் மராமத்துத் துறை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பஞ்சாயத்துச் சாலைகளைப் பற்றித்தான் சொல்லுகிறேன். பஞ்சாயத்துச் சாலைகளில் பஸ் போக்குவரத்துச் சாலைகளை அரசு எடுத்துக் கொள்ளும் திட்டம் இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: சிறப்புத் திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிறப்புத் திட்டத்தின் விவரங்களைச் சொல்ல முடியுமா? காலவரையறையைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போது சொல்லுவது இயலாது.

1972 சனவரி 31]

திரு. நா. வெ. குருசாமி: பெரியாறு, தேக்கடி, வைகை அணை போன்ற முக்கியமான இடங்களுக்குச் செல்லுகின்ற மதுரை—குமிழி சாலை சரிவர இல்லை. வைகை அணைக்குச் செல்லவேண்டுமென்றாலே 40 மைல் செல்ல வேண்டும். அந்தச் சாலை அகலப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்வி யூனியன் சாலைகளை அரசாங்கம் மேற்கொள்வது பற்றி. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது ஏற்கனவே இருக்கும் நெடுஞ்சாலையை அகலப்படுத்துவது பற்றி. தனியாகக் கேள்வி கேட்டால் விவரங்கள் தரப்படும்.

பெரியாறு அபிவிருத்தித் திட்டம்

* 194 வினா—**திரு. பி. எஸ். மணியன்**: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறு அபிவிருத்தித் திட்டம் எத்தனை கோடி ரூபாயில் போடப்பட்டுள்ளது?

(இ) எப்பொழுது அதன் வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) பெரியாறு அபிவிருத்தித் திட்டம் 1966-67-ஆம் ஆண்டில் ரூபாய் 4.25 கோடிக்கு மதிப்பிடப்பட்டது.

(இ) மத்திய நீர் மின் விசைக்குழுவின் ஒப்புதல் கிடைத்தபின் இத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

பச்சையாறு அணைத் திட்டம்

* 195 வினா— **திரு. டி. கணபதி**: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பச்சையாறு அணைத் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மதிப்பீடு பாசனத் தலைமைப் பொறியாளரின் பரிசிலனையிலுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் ஒப்புதல் பெற்றபின் செயல்படுத்தப்படும்.

திரு. எஸ். முகமது கோதர் முகைதீன்: நெல்லை மாவட்டத்திலே மிக வறண்ட பகுதி இந்த நாங்குநேரி பகுதி. எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் இல்லை. ஆகவே, உடனடியாக விவசாயத்திற்குப் பயன் அளிக்கக்கூடிய இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை அமல்படுத்த அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரசு ஆவன செய்து கொண்டிருக்கின்ற காரணத்தால்தான் இப்போது தலைமைப் பொறியாளர் பரிசிலனையில் இருக்கிறது என்று சொன்னேன். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி தேவையாக இருக்கிறது. தலைமைப் பொறியாளர் அறிக்கை அரசாங்கத்திற்குக் கிடைத்த பிறகு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி எவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்றப்படும்.